

# தி.மு.க. இளைஞர் அணி



## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 24.03.2025 | தஞ்சாவூர் வடக்கு | பாபநாசம் | அண்ணா சிலை அருகில், பசுபதிக்கோயில் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பூர்ணிமா |
| 2 | 25.03.2025 | தஞ்சாவூர் தெற்கு | பட்டுக்கோட்டை | மதுக்கூர் பேருந்து நிலையம், பட்டுக்கோட்டை | துரை சம்பத், பார்வின் |
| 3 | 25.03.2025 | சென்னை கிழக்கு | துறைமுகம் | ரமணன் தெரு, யானைக்கவுனி | மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மு.மு.முஸ்தாக் |
| 4 | 25.03.2025 | சென்னை கிழக்கு | வில்லிவாக்கம் | ஜாயிண்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், நரேன் கௌதம் |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 22–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி


இந்தக் கூட்டத் தொடருக்குள்ளாகவே

# மாற்றுத்திறனாளிகளை பணி நிரந்தரமாக்க சிறப்பு தேர்வு நடத்தப்படும்!

## சட்டப்பேரவையில் உறுப்பினர் இனிகோ இருதயராஜ் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பி.கீதாஜீவன் பதில்!

சென்னை, மார்ச் 24- சட்டப்பேரவையில் திருச்சி கிழக்கு தொகுதி உறுப்பினர் இனிகோ இருதயராஜ் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் பி.கீதா ஜீவன் அளித்த பதிலும் வருமாறு:-

**முனைவர் த.இனிகோ இருதயராஜ்:** தகுதிவாய்ந்த அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க அரசு முன்வருமா?

**அமைச்சர் பி. கீதா ஜீவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.



மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் 2009-2010-ஆம் ஆண்டு முதல் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு, குறிப்பாக மாணவமாணவிகள், பணிக்கு செல்வோர், சுயதொழில் புரிவோருக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட மூன்று சக்கர *electric scooter* வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. பின்பு 14.3.2012 முதல் இது இருகால்கள் பாதிக்கப்பட்ட, கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு இந்தத் திட்டம் *petrol scooter* மாற்றி வழங்கப்பட்டது. நம்முடைய முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பொறுப்பேற்றதில் இருந்து 2023-2024 ஆம் ஆண்டு முதல் அரசாணை நிலை எண் 17ன்படி 4.7. 2023ன்படி ஒருகால் பாதிக்கப்பட்டு, கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்கிட ஆணையிடப்பட்டு, இவ்வரசாணையில் தெரிவிக்கப்பட்ட விதிமுறை களின்படி 18 வயது முதல் 65 வயதுடைய, ஒருகால் இயக்கம் இல்லத நிலையிலும், ஆனால் கைகள் நல்லமுறையில் இருக்கின்ற மாற்றுத் திறனாளிகளுக்கு 60 விழுக்காடு உள்ளவர்களுக்கு, இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட *petrol scooter* வழங்கப்பட்டு வருகிறது. இதில் 18 வயது முதல் 65 வயது வரை, வருமானம் உச்சவரம்பு இல்லை. பயனாளிகள், மாணவமாணவிகள், சுயதொழில் புரிபவர்கள் அத்தனைபேர் களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. எத்தனை பேர் விண்ணப்பித்தாலும் வழங்கப்படுகிறது என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

**முனைவர் த. இனிகோ இருதயராஜ்:** எனது திருச்சி (கிழக்கு) தொகுதி உட்பட்ட தகுதி வாய்ந்த மாற்றத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் கொண்ட *petrol scooter* வேண்டுமென்று, விண்ணப்பித்த 34 பேரில், 2 பேருக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அதனுடைய கோரிக்கை கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டு, *Intellectual disability* அறிவுச்சார் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள், மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் *Cerebral palsy and Muscular dystrophy* என்கின்ற தசை சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுடைய குழந்தைகளுடைய தாய்மார்கள்.

பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளை அழைத்துக்கொண்டு பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அவர்களைக் கொண்டு சென்று விடுகிறார்கள். அவர்களை திரும்பவும் கொண்டு வந்து விடுகிறார்கள். அந்த மாதிரியான சூழ்நிலை இருக்கிறது. அந்த மாதிரியான தாய்மார்களுக்கு இணைப்பு பக்கவாட்டு இருக்கை கொண்ட பெட்ரோல் மற்றும் *battery*யால் இயக்கப்படுகின்ற *scooter* வழங்கினால் அவர்களே பள்ளிக்குச் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். அதேபோல, 75 சதவிகிதம் பாதிப்புடைய மாற்றுத் திறனாளிகளுடைய தாய்மார்களுக்குத்தான் இப்போது நாம் தையல் இயந்திரம் கொடுக்கின்றோம். அந்த 75 *percentage* என்பதை 50, 60 *percentage* ஆக ஏதாவது குறைத் தீர்களேயானால், அந்தப் பிள்ளைகளை வைத்துக் கொண்டு அவர்களை மட்டுமேதான் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தில் கொண்டு சென்று, அதை செய்து தர வேண்டுமென்ற கோரிக்கையை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**அமைச்சர் பி. கீதாஜீவன்:** கடந்த ஆண்டுவரை திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 851 ஸ்கூட்டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. அதில் திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதியைச் சார்ந்த தகுதியுடைய 46 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் இதுவரையிலும் வழங்கப்பட்டுள்ளன. 2 பேருக்கு என்று குறிப்பிட்டார்கள். ஆனால், 46 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தகுதியுள்ள நபர்களுக்கும் உறுதியாக இந்த ஆண்டு வழங்கப்படும் என்பதையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதுபோல, புறஉலகு சிந்தனையற்றவர்கள் அதாவது *Autism*, தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், *Muscular Dystrophy*, அதுபோல, மனவளர்ச்சிக் குன்றியப் பிள்ளைகள் *Mentally retarded*, அந்தப் பிள்ளைகளுடைய பெற்றோர்களுக்கும் வழங்க வேண்டுமென்றுக் கூறியுள்ளார்கள். அதற்கு அரசு, முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும். ஆனால், இந்த வகையான பெற்றோர்களுக்கு தற்போது அந்த பிள்ளைகளின் நலனுக்காக *battery wheel chair* வழங்கப்பட்டு வருகிறது. அந்த *battery wheel chair*ல் வைத்துதான் பிள்ளைகளை பள்ளிகளுக்கு அழைத்து செல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்தப் பெற்றோர்களுக்கு தையல் இயந்திரம், சுய தொழில் தொடங்குவதற்குக்கு மானியமும் இத்துறை வழங்கி வருகிறது. அது முதன்முதலாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்த இந்தத் திட்டம் என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

**முனைவர் த. இனிகோ இருதயராஜ்:** அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற அதே சமயத்தில், திராவிட மாடல் அரசினுடைய நிதிநிலை அறிக்கையிலே 172வது *paragraph*ல் மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் நியமன பதவி தரப்படும் என்ற உத்தரவு, குரலற்றவர்களின் குரல்களை கேட்கின்ற அரசாக நடத்திக் கொண்டிருக்கிற தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு அவர்களின் செல்லப்பிள்ளையாக விளங்குகின்ற மாற்றுத் திறனாளிகள் இன்றைக்கும் நன்றி சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது அரசு நிலை எண் 151 என்பது 2 ஆண்டுகள் தொகுப்பு ஊதியத்திலே வேலை பார்க்கின்ற மாற்றுத் திறனாளிகளை நிரந்தரப் பணியாளர்களாக காலைமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்கின்ற அரசு உத்தரவைத் தந்தார். அந்த உத்தரவு சரியான முறையில் நடைமுறைக்கு வரவில்லை. இதுகுறித்து, அரசு அதிகாரிகளைக் கேட்டால் உமாதேவி ஒப்பந்த வழக்கு என்று கோடிட்டுக் காட்டுகிறார்கள். அதாவது *contract*ல் பணியாற்றுகிறவர்கள், *temporary* ஆக பணியாற்றுகிறவர்களை *confirm* பண்ணக்கூடாது, நிரந்தரம் பண்ணக்ககூடாது என்று சொல்லி உச்ச நீதிமன்றம் உத்தரவு வழங்கி இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அதே உச்ச நீதிமன்றத்திலே *Sunanda Bhandare Foundation* என்கின்ற வழக்கிலே அவர்கள் மாற்றுத் திறனாளி களுக்கு 4 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டுமென்று அரசுகளுக்கு உத்தரவு தந்திருக்கிறது.

அதேபோல, சென்னை உயர் நீதிமன்றத்திலே 2 வழக்குகளிலே அரசாணை நிலை எண் 151 உத்தரவை நடைமுறைப்படுத்தி பணி நிரந்தரம் செய்யதுகொள்ள கருத்தில் கொள்ள வேண்டும் என்ற உத்தரவையும் போட்டுள்ளார்கள். எனவே, அவர்களை பணி நிரந்தர மாக்க அரசு உத்தரவு 151ஐ நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியுமா என்ற கோரிக்கையை கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் பி. கீதா ஜீவன்:** அந்த அரசு நிலை எண் 151ஐ தான் மறு ஆய்வு செய்து மறு பரிசீலனை செய்து அரசு நிலை எண் 20 ஆக மாற்றி அமைக்கப்பட்டு சிறப்பு ஒரு தேர்வு மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக நடத்தப்படும் என்று இந்தச் சபையிலே அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்காக விரைவாக இந்த பணி கிட்டத்தட்ட 1,200க்கும் மேற்பட்டப் பணியிடங்கள் கண்டறியப்பட்டு அதில் விரைவாக சிறப்புத் தேர்வு நடத்துவதற்கு, அனேகமாக இந்த சட்டசபைக் கூட்டத் தொடருக்குள்ளாகவே அதற்கான தேதியும் அறிவிக்கப்படவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்கள். அந்தப் பணி நடைபெற்று வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் பதிலளித்தார்.


# தி.மு.க. இளைஞர் அணி

## சென்னை கிழக்கு மற்றும் மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் நியமனம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் டி.லோகேஷ் மற்றும் மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.அழகுபாண்டி ஆகியோர் அந்தப் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டு,

சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளராக வழக்கறிஞர் 'வானவில்' விஜய், 19/20, ஏ–பிளாக், லேண்ட் மார்வல் பிளாட்ஸ், சந்நிதி தெரு, வில்லிவாக்கம், சென்னை–49,

மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளராக எம்.இளங்கோ, சி.வி.எஸ்.அவென்யூ, ஒத்தப்பட்டி, கருப்பாயூரணி, மதுரை–20 ஆகியோர் அப்பொறுப்புகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை,
சென்னை-18
நாள் : 22-03-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி